**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 115/2020

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | பெருமாள் கவுண்டர் | வயது | : 59 |
| கிராமம் | வனவாசி | நாள் | : 24.02.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 24.02.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 29.12.2011ம் தேதியிட்ட எனது பெயரிலான தானசெட்டில்மெண்ட் ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 15.07.1964ம் தேதியில் என் தாயார் ராஜம்மாள் பெயரிலுள்ள கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. ச.எண்.484/4A மற்றும் 489/7C ஆகிய சொத்துக்களுக்கு என் தாயார் ராஜம்மாள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.881 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. தாவா சொத்தின் அடங்கல் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. வனவாசி கிராம நிர்வாக அலுவலர் தந்த 25.08.2020ம் தேதியிட்ட அனுபவ சான்று அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா சொத்தின் புலவரைபடம் நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவா சொத்தை காட்டக்கூடிய புகைபடங்கள் (எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 04.03.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.